செ.வெ.எண்: 794/2016 நாள்: 11.11.2016

**தொழில் தொடங்க அரசு மானியத்துடன் கடன் திட்டம்**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நமது கன்னியாகுமரி மாவட்டமானது கல்வியறிவு பெற்ற முதன்மை மாவட்டமாக இருந்த போதிலும் படித்த இளைஞர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்வதால் இம்மாவட்ட தொழில் வளர்ச்சிக்கு அவர்களால் எவ்வித பங்களிப்பில்லாத நிலை உள்ளது.

எனவே முதல் தலைமுறையைச் சார்ந்த பட்டப்படிப்பு, பட்டயபடிப்பு, (டிப்ளமோ) அல்லது ITI முடித்த இளைஞர்கள் புதியதாக தொழில் தொடங்குவதற்காக தமிழக அரசு ”புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்” (NEEDS) என்ற மிகச் சிறந்த ஒரு திட்டம் மாவட்ட தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

25% மானியத்துடன் கூடிய இத்திட்டத்தின் மூலம் திட்ட மதிப்பீடு ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூபாய் ஒரு கோடிக்கு மிகாமல் புதியதாக உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள் தொடங்கலாம். பொதுப்பிரிவினர் திட்ட மதிப்பீட்டில் 10 சதவிகிதமும், மகளிர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் ஆகிய சிறப்புப் பிரிவினர் திட்ட மதிப்பீட்டில் 5 சதவிகிதமும் விண்ணப்பதாரரின் சொந்த முதலீடாக செலுத்த வேண்டும். திட்ட மதிப்பீட்டில் 25% (அதிக பட்சம் ரூ.25 இலட்சம்) மானியமாக வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ் வங்கிக் கடனுதவி பெற்றவர்கள் முறையாக கடனை திருப்பி செலுத்தும் பட்சத்தில் 3% பின்முனை வட்டி மானியமும் வழங்கப்படும்.

இத்திட்டத்தில் மகளிருக்கு 50% ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் மூலம் ஒரு மாத கால பயிற்சி எவ்வித கட்டணமுமின்றி வழங்கப்படும்.

இந்நிதியாண்டில் (2016-17) இத்திட்டத்திற்கு ரூ.260 லட்சம் மானியமாக வழங்கிட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே இத்திட்டத்தின் கீழ் மேலும் தகுதியானவர்கள் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறியீட்டினை எய்திட தேர்வு செய்யப்படவுள்ளதால் கீழ்க்குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள தொழில் முனைவோர்கள் விண்ணப்பங்கள் செய்து பயன் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தகுதிகள் :**

| | | |
|---|---|---|
| கல்வித்தகுதி | : | பட்டப்படிப்பு, பட்டய படிப்பு, ஐடிஐ மற்றும் அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனத்தில் தொழில் கல்வி (Vocational Training) |
| வயது வரம்பு | : | **பொதுப்பிரிவினர்**<br>21 வயதுக்கு மேல் 35 வயதிற்குள்<br><br>**சிறப்புப்பிரிவினர்**<br>21 வயதுக்கு மேல் 45 வயதிற்குள்<br>(பெண்கள்/ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், /முன்னாள் இராணுவத்தினர்/மாற்றுத்திறனாளிகள் /திருநங்கைகள்)<br><br>முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருத்தல் வேண்டும். |

**மேலும் விபரங்களுக்கு**

பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், தொழிற்பேட்டை, கோணம் அஞ்சல், நாகர்கோவில்-4 என்ற முகவரியை தொடர்பு கொண்டு (தொலைபேசி எண்: 04652-260008) பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.